# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 20/2015** **நாள் : 17/10/2015**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்புள்ள தோழரே,
வணக்கம்,

## டிசம்பர் 8-இல் அகில இந்திய வேலை நிறுத்தம்
## நவம்பர் 6-இல் கொச்சி (கேரள மாநிலம்)
## அகில இந்திய மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்.

இந்திய மின் துறையை சீரழிக்கும் விதமாக 2014 மின்சார சட்ட திருத்த மசோதாவை பாராளுமன்றத்தில் முன் மொழிந்து சட்டமாக்க மத்திய அரசு மூர்க்கத்தனமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

சென்ற நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்ற போதே மின்சார சட்ட திருத்த மசோதாவை சட்டமாக்க முயற்சிகளை மேற்கொண்டது. பாராளுமன்றத்தில் இச் சட்டம் வரும் தினத்தில் இதற்கு எதிராக இந்திய நாடு முழுவதும் உள்ள மின்ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என அகில இந்திய மின்சார தொழிலாளர்கள், பொறியாளர்கள் கூட்டமைப்பின் அறைகூவலை ஏற்று தமிழகத்திலும் தீவிர தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில், பல காரணங்களால் சென்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் மசோதா சட்டமாக்கப்படவில்லை. ஆனால் மத்திய அரசு எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் மசோதாவை சட்டமாக்குவதற்குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

இவைகளின் பின்னணில் 24.9.2015 அன்று டெல்லியில் கூடிய அகில இந்திய மின்சார தொழிலாளர், பொறியாளர் கூட்டமைப்பில் 8.12.2015 அன்று இந்திய மின் ஊழியர்கள் நாடு தழுவிய அளவில் வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்து அதற்கான இந்திய நாடு முழுவதும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலும் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க மின் வாரியத்தில் உள்ள தொழிற்சங்கங்களின் கூட்டு கூட்டத்தை 26.10.2015 அன்று கூட்டி திட்டமிட உள்ளோம். இந்த அடிப்படையில் இப்போதே கிளைகள் டிசம்பர் 8 வேலை நிறுத்தத்தின் அவசியத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றிட வேண்டுகிறோம்.

இதற்கிடையில் மாநில மின் துறை அமைச்சர்களின் மாநாட்டை மத்திய அரசின் சார்பில் 6.11.2015 அன்று கேரள மாநிலம், கொச்சின் மாநகரில் நடைபெற உள்ளது. அன்றே தேசிய மின்சார தொழிலாளர், பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக ஒரு பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தை நடத்தி மின்சட்ட திருத்தம்

2014-க்கு எதிராக நமது கண்டத்தை முழங்கிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

கேரள மாநிலத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர்களை பெருமளவில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பும், அகில இந்திய மின்சார தொழிலாளர், பொறியாளர் கூட்டமைப்பும் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து அதிக பட்சமான ஊழியர்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் தமிழகத்தில் இருந்து 1000 ஊழியர்களை பங்கு பெறச் செய்வதென்றும் அதற்கான கோட்டாக்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் கோவை, ஈரோடு ஆகிய மண்டலங்கள் 500-க்கும் மேற்பட்ட ஊழியர்களை கலந்து கொள்ளச் செய்வதென்றும் இதர பகுதிகளில் இருந்து, மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், கிளை நிர்வாகிகள், ஆகியோர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வதென்றும் மையத்தில் ஆலோசிக்கபட்டுள்ளது. **அந்த அடிப்படையில் கேரள மாநிலம் கொச்சினில் 6.11.2015 அன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்திலும் திட்டமிட்டவாறு ஊழியர்களை கலந்து கொள்ளச் செய்ய வேண்டுகிறோம்.**

## 2014-15 ஆம் ஆண்டு போனஸ்க்கான கோரிக்கையும் - இயக்கமும்

## மத்திய அமைப்பு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் - 28.10.2015 மறியல்

1. வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் பகுதி நேர ஊழியர்களின் போனஸ் மற்றும் கருணைத் தொகை 30 சதவீதம் வழங்கிட வேண்டும்.

2. போனஸ் வழங்கும் சட்டத்தில் உள்ள ஊதிய வரம்புகளை மத்திய அரசு உயர்த்த உள்ளதையும் கணக்கில் கொண்டு பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் 30 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையும் வழங்கப்பட வேண்டும்.

3. 31.3.2015 வரை பணியாற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கு உட்படாத அனைத்து பகுதி நேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்தர ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல 30 சதவீதம் போனஸ், கருணைத் தொகையை வழங்கிட வேண்டும்.

4. சென்ற ஆண்டு போனஸ் அறிவித்த போது 158 ஒப்பந்த தொழிலாளிகளே உள்ளதாக அறிவித்து அவர்களுக்கு கருணைத் தொகையாக ரூ2000/- என்று வழங்கியது நியாயம் அல்ல என்பதை குறிப்பிட்டு இந்த ஆண்டு அனல், புனல், உற்பத்தி பொது கட்டுமான வட்டம், விநியோக வட்டங்களில் பணியாற்றும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு 30 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையை வழங்கிட வேண்டும்.

போன்ற கோரிக்கைகள் வாரியத்திடம் முன் வைக்கப்பட்டுள்ளது. வாரியமும் வெகுசீக்கிரத்தில் பேச்சுவார்த்தை அழைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.இதில் நாம் நான்காவதாக வைத்துள்ள கோரிக்கை மின் வாரியத்தில் அனல், புனல் பொது கட்டுமான வட்டம், விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு அவர்களுக்கும் 30 சதவீதம் போனஸ் கருணைத் தொகையை வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

இதற்கிடையில் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் குழு கூட்டம் நடைபெற்று போனஸ் கோரிக்கையை முன் வைப்பது. அதன் மீது அரசின் நிறுவனத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 28.10.2015 முதல் 30.10.2015 வரை துறை வாரியான இயக்கங்கள் நடத்துவது என்ற அறைகூவலும் விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு போனஸையும் , கருணைத்தொகையையும் பெற்றுத்தரும் வகையில் அரசின், வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் **மாவட்ட தலைநகரங்களில் எதிர் வரும் 28.10.2015 அன்று மறியல்** இயக்கத்தை நடத்துவது என்று மாநில மையத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்முடிவினை வெற்றிக்கரமாக்கி மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை உறுதிப்படுத்தி போனஸையும் பெற்றுத்தருகின்ற பணி நம்முன்னால் உள்ளது என்ற அடிப்படையில் காலம் மிக குறுகிய நிலையில் இருந்த போதிலும் ஒப்பந்த தொழிலாளர்களை, பகுதி நேர பணியாளர்களை முழுமையான அளவில் இம்மறியலில் ஈடுபடுத்துவதுவதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுகிறோம். இந்த ஆண்டு போனஸ் நன்கொடையை ஊழியர்களிடம அனுமதி கடிதம் பெற்று, போனசில் பிடித்தம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதோடு 28.10.2015 நாளது திட்டமட்ட மறியலில் வாய்ப்பு உள்ள இடங்களில் என மாவட்ட சிஐடியு தலைவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு**

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றிடும் வகையில் வாரியம் இரு ஆலோசனைகளை முன் வைத்துள்ளது. இந்த இரு ஆலோசனைகளின் மீதும் முழுமையாக பேசி முடிவு காண்பதற்கு முன்பாக களப்பிரிவு பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை உடனடியாக அகற்றிடும் வகையில் கீழ்காணும் ஆலோசனைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்திட உள்ளோம்.

1. களப்பிரிவு ஊழியர்களுக்கு திட்ட மட்டத்தில் உள்ள காலி பணி இடங்கள் அடிப்படையில் திட்ட மட்ட அளவில் முதன்மை பதவி உயர்வு பட்டியலில் தயாரித்து பதவி உயர்வு வழங்கும் நிலை தொடர்ந்திட வேண்டும்.

2. (அ) வணிக உதவியாளருக்கும், கம்பியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்குவதில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை சரி செய்யும் விதமாக ஒரு திட்டத்தில் வணிக உதவியாளர், வணிக ஆய்வாளராக பதவி உயர்வு பெறுகின்ற அதே தேதியில் கம்பியாளராக சேர்ந்தவர்களுக்கும் மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு அளித்திட வேண்டும்.

   (ஆ) வணிக உதவியாளருக்கு, வணிக ஆய்வாளராக காலிப்பணி இட அடிப்படையில் பதவி உயர்வு வழங்கினாலும் அதே நாளில் பணியில் சேர்ந்த கம்பியாளருக்கு மின்பாதை ஆய்வாளர் பதவி காலி பணி இடங்கள் இல்லாமல் போனாலும் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவிகளை அனுமதித்து அதே தேதியில் பதவி உயர்வு அளித்திட வேண்டும்.

   (இ) தற்போது கம்பியாளராக பணிபுரிவர்களில் கம்பியாளராக பணியில் சேர்ந்த தேதியில் வணிக உதவியாளர் பணியில் சேர்ந்து வணிக ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தால் இந்த கம்பியாளர்கள் அனைவருக்கும் மின்பாதை ஆய்வாளர் பதவிக்கான காலியிடம் இல்லாவிட்டாலும், உடனடியாக சூப்பர் நியூமரரி மின்பாதை ஆய்வாளர் என்று அனுமதித்து அனைவருக்கும் பதவி உயர்வு அளித்திட வேண்டும்.

3. களப்பிரிவில் பதவி உயர்வு அளிப்பதற்கு பணி அனுபவ வருடம் ஏதும் நிர்ணயிக்கக் கூடாது. இப்போது இருக்கின்ற கால நிர்ணயிப்புகள் அனைத்தும் ரத்து செய்திட வேண்டும். போன்றவைகளை முன்வைத்து பேச்சு வார்த்தைகளை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

மத்திய அமைப்பு சம்மேளனம் கணக்காயர், களத்தொழிலாளர் சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யூ.சி. ஆகிய சங்கங்கள் இந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்திட முன் வந்துள்ளது.

**கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கையும், மத்திய அமைப்பும்**

கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்வுக்காண மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ச்சியாக முயற்சித்து வருகிறது. அம்முயற்சியின் ஒரு கட்டமாக நாம் வைத்த கோரிகைகளில் சிலவற்றை தீர்வு கண்டு வாரிய உத்தரவாக பிறப்பிக்கப்பட்டுள்ளதை ஏற்கனவே சுற்றிக்கையின் மூலம் தெரியபடுத்தி உள்ளோம். அந்த வாரிய உத்தரவின் சாராம்சத்தை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நடவடிகக்கையை எடுத்திட வேண்டுகிறோம். மறுபுறத்தில் வாரிய உத்தரவை திட்டங்களில் அமலாக்கச்செய்யும் விதமாக வாரிய உத்தரவின் நகலை இணைத்து மேற்பார்வை பொறியாளர்களுக்கு கடிதம் எழுதி அதில் சொல்லப்பட்ட விவரங்களை எல்லா திட்டங்களிலும் அமலாக்கிட செய்திட வேண்டும். அதில் கிளை நிர்வாகிகள் கவனமாக இருப்பதோடு இந்த உத்தரவு அமலாக்கத்தின் விவரத்தை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டுகிறோம்.

இதை தவிர நாம் எழுப்பிய கோரிக்கைகளில் தீர்வுக்காணப்படாதவைகள் சம்மந்தமாக அதாவது கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் சுயேட்கையான பணியை உத்தரவாதப்படுத்துவது அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கின்ற வகையில் புதிய பதவிகளை அனுமதிக்க செய்வது கணக்கீட்டாளர் 2ம் நிலையில் இருந்து கணக்கீட்டாராக பதவி உயர்வு 5 ஆண்டுகள் பணி முடித்த தேதியில் இருந்து பதவி உயர்வு வழங்கியதாக கருதி அதற்குண்டான நிலுவைத் தொகையையும் வழங்கிட வேண்டும். என்று கடிதங்கள் எழுதப்பட்டுள்ளது. கடிதங்கள் இம்மாத மின்கதிரில் பிரசுரிக்கப்படும்.

இவை தவிர கணக்கீட்டாளர் ஆலோசனைக்குழு கூடி சில ஆலோசனைகளை முன் வைத்துள்ளது. இந்த ஆலோசனைகள் நிர்வாகிகள் குழு கூட்டத்தின் முடிவுக்கு பின்னர் இதை அமலாக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

குறிப்பு

மின்வாரியப் பணியில் இருந்து பணி ஓய்வு பெற்றோர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், கருணைத் தொகை பெறுபவர்கள், மறுமணம் செய்து கொள்ளாதவர்கள், திருமணமே செய்து கொள்ளாதவர்கள், வேறொங்கும் பணி செய்யாமை, திரும்பவும் நிறுவனங்களில் பணிபுரியாதது, மற்றும் உயிருடன் இருத்தலுக்கான உறுதிச்சீட்டு, எழுத்து மூலச் சான்றறிவிப்பு கொடுக்க வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது அந்த உத்தரவு ஜனவரி 2016 முதல் அமலுக்கு வரஉள்ளது.

இளநிலை பொறியாளர் 2ம் நிலையில் இருந்து இளநிலை பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வுக்கு டி.பி.சி நடைபெற்று முடிந்துள்ளது. அதில் சுமார் 230 பொறியாளர்களுக்கு பதவி உயர்வில் பட்டியல் இடம் பெற உள்ளார்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

## 2015 நவம்பர் கொச்சியில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வடசென்னை | 20 | |
| 2. | மத்திய சென்னை | 20 | |
| 3. | மேற்கு சென்னை | 20 | |
| 4. | தென்சென்னை | 20 | |
| 5. | செங்கல்பட்டு | 10 | |
| 6. | காஞ்சிபுரம் | 15 | |
| 7. | வேலூர் | 10 | |
| 8. | திருப்பத்தூர் | 10 | |
| 9. | தர்மபுரி | 50 | |
| 10. | விழுப்புரம் | 20 | |
| 11. | கடலூர் | 20 | |
| 12. | திருவண்ணாமலை | 20 | |
| 13. | கள்ளக்குறிச்சி | 20 | |
| 14. | பெரம்பலூர் | 10 | |
| 15. | திருச்சி/மாநகர் | 15 | |
| 16. | கரூர் | 10 | |
| 17. | புதுக்கோட்டை | 5 | |
| 18. | தஞ்சாவூர் | 10 | |
| 19. | நாகப்பட்டிணம் | 10 | |
| 20. | மதுரை | 15 | |
| 21. | மதுரை மாநகர் | 10 | |
| 22. | தேனி | 20 | |
| 23. | ராமநாதபுரம் | 10 | |
| 24. | சிவகங்கை | 10 | |
| 25. | திண்டுக்கல் | 15 | |
| 26. | விருதுநகர் | 5 | |
| 27. | திருநெல்வேலி | 20 | |
| 28. | தூத்துக்குடி | 20 | |
| 29. | கன்னியாகுமரி | 10 | |
| 30. | நீலகிரி | 30 | |

| | | | |
|---|---|---|---|
| 31. | கோவைதெற்கு | 50 | |
| 32. | கோவைவடக்கு | 30 | |
| 33. | கோவை மாநகர் | 50 | |
| 34. | திருப்பூர் | 50 | |
| 35. | உடுமலைபேட்டை | 50 | |
| 36. | சேலம் | 30 | |
| 37. | மேட்டூர் | 30 | |
| 38. | ஈரோடு | 60 | |
| 39. | கோபி | 20 | |
| 40. | நாமக்கல் | 20 | |
| 41. | வடசென்னை அனல் | 5 | |
| 42. | எண்ணூர் | 5 | |
| 43. | மேட்டூர் அனல் | 5 | |
| 44. | தூத்துக்குடி அனல் | 5 | |
| 45. | ஈரோடுஉற்பத்தி | 5 | |
| 46. | காடம்பாறை | 5 | |
| 47. | குந்தா உற்பத்தி | 5 | |
| 48. | நெல்லைஉற்பத்தி | 5 | |
| 49. | காற்றாலைபண்ணை | 5 | |
| 50. | பொதுகட்டுமானம்/சென்னை | 10 | |
| 51. | பொதுகட்டுமானம்/மதுரை | 5 | |
| 52. | பொதுகட்டுமானம்/சேலம் | 5 | |
| 53. | திருவாரூர் | 5 | |
| 54. | கிருஷ்ணகிரி | 10 | |
| 55. | தலைமையகம் | 5 | |
| 56 | பொறியாளர் அமைப்பு | 20 | |
| 57. | வள்ளூர் அனல் மின்நிலையம் | 5 | |
| 58. | தூத்துக்குடி (தனியார் மின்நிலையம்) | 5 | |
| | **மொத்தம்** | **1005** | |